முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.

I.A.No.119/2014 in I.A.No.438/2013

Original Suit No. 281/2013

**ம.சா.1 சரவணன் மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பைனான்ஸ் தொழில். ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை. 1ம் மனுதாரர் கந்தசாமியும், என்னுடன் சேர்ந்து டெக்ஸ்டைல் தொழில் செய்து வருகிறார். பைனான்ஸ், ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை. நான் எனக்காகவும், 1ம் எதிர்மனுதாரருக்காகவும் தான் சேர்ந்து சாட்சியம் அளிக்கிறேன். நான் கருப்புசாமி, பெரியசாமி, சின்னசாமிக்காக சாட்சியம் அளிக்கவில்லை. 2013ம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் கிரையம் பேசினோம். தேதி குறிப்பிட முடியாது. 2,3 முறை கிரையம் பேசினோம், எங்கு வைத்து பேசினோம் என்று ஞாபகமில்லை 5 பேர் இருப்பதால் தனித்தனியாக பேசினோம். மனுவிற்கான விவரங்களை 5 மனுதாரர்களும் சேர்ந்து தான் வழக்கறிஞருக்கு சொன்னோம். கிரையம் பேசும் போது மனு சொத்திற்கான மூல ஆவணம், வருவாய் துறை ஆவணம், வில்லங்கம் ஆகியவற்றை பார்க்கவில்லை. கிரையத்தன்று தான் மூல பத்திரத்தை பார்த்தோம். கிரையம் பேசிய சமயத்தில் கிரைய முன் தொகை கொடுக்கவில்லை. கிரைய தேதிக்கு முன்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் எதுவும் போட்டுப்பார்க்கவில்லை. கிரையத்திற்கு பிறகு வில்லங்கம் போட்டு பார்த்தேன். 23.08.2013ம் தேதி கிரையம் பதிந்த பிறகு 1 மாதம் கழித்து வில்லங்கம் போட்டு பார்த்தேன். 22.05.2013ம் தேதி கிரையத்திற்காக முத்திரைத்தாள் வாங்கினோம். முத்திரைத்தாள்கள் எந்த முத்திரை விற்பனையாளரிடமிருந்து வாங்கியது என்று ஞாபகமில்லை. 1,15,500 ரூபாய்க்கு முத்திரைத்தாள் வாங்கப்பட்டது. (எதிர்மனுதாரரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திருமதி. A. மலர்விழி
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.